சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. IA 1/2025 in OS.71/2025**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் நாள் புதன்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய ம.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஷ்குமார் | தொழில் | பட்டு தொழில் |
| தந்தை பெயர் | வெங்கடேசன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 43 |

**01.04.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.06.2025 தேதியிட்ட வில்லங்கச்சான்று **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுவில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.